1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1972-ம் ஆண்டு, மதுரை மாவட்டம், வைகை அணைக்கருகில் நைலான்—6 துணி நூலிழை தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை டிட்கோ நிறுவ உத்தேசித்திருந்தது. ஆயினும் இத்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான அனுமதியை மத்திய அரசிடம் பெற முடியாததால் இதை செயல்படுத்த இயலவில்லை.

மின்சார உற்பத்தி மீது வரி.

*வினா எண் 582-திரு. என். திட்டப்பா ; மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு யளிப்பாரா —

(அ) மின்சார உற்பத்தி மீது மத்திய அரசு அண்மையில் விதித்த (எக்சைஸ் லெவி) வரியை குறித்து முற்றிலும் மறு பரிசீலனை செய்திடக் கோரி மத்திய அரசிடம் நமது மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய மேல் நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஆயத் தீர்வை விதிப்பின் மூலமாக பெறும் தொகையை திரும்ப மாநில அரசுக்குக் கொடுப்பதாகவும் இம்முடிவு 1979-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து செயல்படும் எனவும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது குறித்த முடிவு 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளிலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தி இவ்வரசு மத்திய அரசுடன் கடித தொடர்பு கொண்டுள்ளது.

சேத்தூரில் உப மின் நிலையம்.

*வினா எண் 583 திரு. இரா. தாமரைக் கனி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேத்தூரில் 66 . K.V. உப மின் நிலையம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) இல்லையெனில், தாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிந்துவிட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்த சேத்தூர் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கு 66 கே. வி. உப மின் நிலையம் ஆரம்பித்தால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், பொது மக்களும் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். ஆகவே, அதை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்ததடகாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் தமிழக முதல்வரவர்களுக்கும் அப்பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரப் பகுதிகளுக்கு போரூர் ஏரியிலிருந்து குடி நீர் வழங்கல்.

*வினா எண் 584— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரைச் சேர்ந்த அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகளுக்கு குடி தண்ணீர் விநியோகத்திற்கு போரூர் ஏரியிலிருந்து குழாய்கள் அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த குடி தண்ணீர் சப்ளை மூன்று நகர்களுக்கும் போதுமானவையா அல்லது பற்றாக்குறையா?

(இ) இதனை விரிவுபடுத்த திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூபாய் 8.95 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டது. அசோக் நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகள் இதனால் பயனடையவில்லை.

(ஆ) போரூர் ஏரியில் உள்ள கிணறுகளிலிருந்து வழங்கப்படும் தண்ணீர் மட்டும் இப்பகுதிகளுக்கு போதுமானதல்ல.

(இ) இப்பகுதிகள் இப்போது முழுமையாக சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ளதால, தேவையான குடி நீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு அந்தப் பகுதியிலுள்ள கருணாநிதி நகர் இருக்கும் பகுதி, எம். ஜி. ஆர். நகர் இருக்கும் பகுதி ஆகியவற்றில் தண்ணீர்க் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படியிருந்தும் இவ்வளவு ரூபாய் செலவில் போடப்பட்ட அந்தத் திட்டம் *பெயிலியர் ஆகிவிட்டதா அல்லது நல்லமுறையில் செயல்படுகிறதா என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியில் விரைவாகத்